தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 || சென்னை 13—4—57 சனிக்கிழமை || இதழ் 30

தென்றரசு

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று கோலார் தங்கவயலில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றிய செய்தியை நமது கழக ஏடான 'நம்நாடு' இதழில் படித்தவுடன் தமிழகமெங்கணுமுள்ள கழகத் தோழர்களும், பம்பாய், அகமதாபாத், இலங்கை முதலிய பகுதிகளில் வாழும் தமிழர்களும் முழு விபரம் தெரிவிக்கும்படி ஏராளமான கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், நடந்தவற்றை நடந்தபடி தெரிவிக்கும் பொருட்டு, தங்கவயல் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட நான், தங்கவயல் சம்பவத்தை கூட்டாமல் குறைக்காமல் இங்கே தந்திருக்கிறேன்.

ஆசிரியர் கண்ணதாசன், நான், காட்டாம்பூர் தோழர் வி. நல்லமுத்து, திருப்புத்தூர் தோழர் வி. சங்கரன் ஆகிய நால்வரும் தனிக்கார்மூலம் ஞாயிறு மாலை 5-30 மணியளவில் தங்கவயல் போய்ச் சேர்ந்தோம். மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த தங்கவயலில் தி. மு. கழகத்திற்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதை நகர் முழுதும் பறந்துகொண்டிருந்த கழகக்கொடிகள் தெரிவித்தன.

கே. ஜி. எப். உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் கழகக் கொடி வானளாவப் பறக்க, மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தி. மு. க. மேடை கம்பீரமாக விளங்கியது.

அன்றைய தினமே நகரின் வேறொரு பகுதியில் தோழர் ப ஜீவானந்தம் பேசுவதாக விளம்பரம் செய்யப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. கழகத்தோழர்களும், கம்யூனிஸ்டுத் தோழர்களும் தனித்தனி அணியாக நகர் முழுதும் போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருந்தார்கள்.

சரியாக ஏழு மணிக்கு நமது பொதுக்கூட்டம் துவங்கியது. தொழிலாளர்களும், மாணவர்களும், தாய்மார்களுமாக ஏறத்தாழ நாற்பதாயித்துக்கு மேற்பட்ட மக்கள் மைதானத்தில் திரண்டிருந்தார்கள். தோழர் **எம். இ. சாம்பசிவம்** அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். தோழர் சாம்பசிவம் தங்கவயல் தி. மு. கழகத்தில் முக்கியமானவர். கழகக் காரியங்களில் தவறுது பங்கேற்பவர். நடைபெற்ற பொதுத் தேர்தலில் தங்கவயல பகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு ஓரளவு மக்களின் வாக்குகளைப் பெற்றவர். தோழர் சாம்பசிவம் தனது தலைமையுரையில் தங்கவயலில் கழகம் ஆற்றியிருக்கும் பணிகளையும், தொடர்ந்து ஆற்றப் போகும் பணிகளையும் எடுத்துரைத்தார். அடுத்தபடியாக நான் பேசினேன். கேரளத்துக் கம்யூனிஸ்டுகளைப் பற்றியும், அங்கே அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்தபோது தமிழகத்துக் கம்யூனிஸ்டுகள் பேசிய பேச்சுக்களையும் அவர்களுக்கு நினைவுப்படுத்தும் விதத்தில் சுமார் அரை மணி நேரம் பேசினேன்.

கடைசியாகக் கண்ணதாசன் பேசினார். தங்கவயலுக்கு அண்மையில் வந்துபோன கம்யூனிஸ்டுத் தலைவர்கள் என்னென்ன காரணங்களைக்காட்டி, 'திராவிட நாட்டுப் பிரிவினை அநாகரீகமானது' என்று 'உளறி' விட்டுப் போனார்களோ, அந்த 'உளறல்'களுக்கெல்லாம் பதில் தரும் வகையில் விளக்கமாகப் பேசினார். பொதுத் தேர்தலில் கழகத்திற்குக் கிடைத்த வாக்குகளையும், 'ஏக இந்தியா' பேசும் கம்யூனிஸ்டுகளுக்குக் கிடைத்த வாக்குகளையும் ஒப்பிட்டுக்காட்டினார். கழகம் நடத்திய போராட்டங்களால் மக்களுக்குத் தொல்லைகள் இல்லையென்றும், ஆனால் கம்யூனிஸ்டுகளின் போராட்டங்கள் அப்படியல்ல, பயங்கரமானவை என்றும் கூறி ஆதாரங்களை எடுத்துச் சொன்னார். முடிவாகத் தமிழர் கலாச்சாரத்திற்கும், வடவர் கலாச்சாரத்திற்கும் உள்ள வேறுபாட்டை விளக்கிக் கொண்டு வந்தார். அப்போது நகரின் தென்புறமிருந்து ஒரு கம்யூனிஸ்டு ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. விளம்பரம் செய்திருந்தபடி தோழர் ஜீவானந்தம் வராததால், கம்யூனிஸ்டுகள் ஆத்திரமடைந்து நமது கூட்டத்தைக் கலைக்கத் திட்டமிட்டு மைதானம் நோக்கிவந்தார்கள். அந்தப் பகுதியில் கலகங்களே செய்து 'பேர்போன' அவர்கள் நமது கூட்டத்தை நெருங்கியவுடன் தாய்மார்கள் அலறித் துடித்துக்கொண்டு சிதறி ஓடினார்கள். மேடையில் பேசிக்கொண்டிருந்த கண்ணதாசன் அனைவரையும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். மூலைக்கு மூலை நின்று கூட்டத்தைப் பாதுகாத்த தங்கவயல் கழக முன்னோடிகள் கூட்டத்தின் அமைதிக்கு பெரிதும் உழைத்தார்கள். ஆனால் அதற்குள்ளாக கம்யூனிஸ்டு ஊர்வலம் நமது கூட்டத்திற்குள் புகுந்து விட்டது. பீதியடைந்த பொதுமக்கள் மோதியடித்துக் கொண்டு திக்குத் தெரியாமல் ஓடினார்கள். சிலர் கால் இடறி விழுந்தார்கள். அதுவரை எந்தப் போலீசாரும் குழப்பத்தை அடக்க முயற்சி எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆரம்பத்திலேயே, கம்யூனிஸ்டுகளை நமது கூட்டத்தருகில் வர விடாமல் செய்திருந்தால் இத்தனை பெரிய குழப்பம் நடந்திருக்காது. போலீசார் அதைச் செய்யத் தவறிவிட்டதை இங்கே குறிப்பிடாதிருக்க முடியவில்லை.

கூட்டத்திற்குள் புகுந்த குழப்பக்காரர்கள் 'சித்தாபாத்! கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஜே!' என்று கத்தினர். உடனே வெள்ளம் போல் திரண்டிருந்த தமிழர்கள் 'திராவிட நாடு திராவிடருக்கே! அண்ணா வாழ்க' என்று முழக்கமிட்டார்கள்! கடலலையின் பேரொலிக்கு எதிரே காக்கைகளின் கரைச்சல் வலுப்பெற முடியுமா? குழப்பக்காரர்களின் குரல் மங்கிவிட்டது. வெறியுணர்ச்சி கரைபுரண்டது அவர்களுக்கு! மேடையைத் தாக்க ஆரம்பித்தார்கள். வி...ர்...ர், வி...ர்...ர் என்று கற்கள் மேடை நோக்கி வந்து விழுந்தன. நமது தோழர்கள் பலர் மேடையிலிருப்போருக்குச் சேதமேற்படாத வகையில் பாதுகாக்க சுவர் வைத்தார்ப்போல கை கோர்த்து நின்றார்கள். குழப்பக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் கூட்டத்திற்குள் நுழைந்து மேடைக்கருகில் வந்து மேடையில் நின்றவர்களைக் குறி வைத்து ஒரு பெருங்கல்லை வேகமாக வீசினார். அந்தக் கல், முனிய ரத்தினம் என்ற நமது கழகத்தைச் சார்ந்த தொழிலாளியின் கன்னத்தில் அடித்தது. அவர் மேடையிலேயே சுருண்டு விழுந்தார். அவரது கடைவாய்ப் பற்கள் ஆட்டங் கண்டு விட்டன. கன்னத்திலிருந்து ரத்தம் வடிந்துகொண்டிருந்தது. மேடைக்குப் பின் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டாரில் நானும், திருப்புத்தூர் நண்பர்களும் உட்கார்ந்திருந்தோம். மேடையில் கற்கள் சரமாரியாக விழவும் நாங்கள்

'ஜீவா'வின் மீதிருந்த சிற்றத்தை

கழகத்தின் பக்கம் திருப்பிய 'ஞானேதயர்'கள்!

மேடைக்குப் போக கதவைத் திறந்தோம். காருக்குப் பக்கத்திலேயே ஒளிந்துகொண்டு நின்ற நாலைந்து குழப்பக்காரர்கள் கதவைத் திறக்கவொட்டாவகையில் முன்னும் பின்னுமாக மண்ணை வாரி அடித்தார்கள். தடித்த ஆசாமி ஒருவர் வேகமாக ஓடி வந்து ஒரு கழியால் மோட்டாரின்பின்பக்கக் கண்ணாடியில் அடித்து விட்டு ஓடினார். நமது தோழர்கள் எவ்வளவோ முயன்றும் ஓட்டத்தில் கெட்டிக்காரரான அந்த 'வீரரை'ப் பிடிக்க முடியவில்லை.

குழப்பம் அதிகரித்தது. நகரமே பீதி கொண்டது. கடைச் சிப்பந்திகள், நகரில் வாழும் கழகப் பற்றுக் கொண்டோர் அத்தனை பேரும் மைதானம் நோக்கி விரைந்தார்கள். பெண்கள் வாய் விட்டுக் கதறினார்கள். படுகாயமுற்ற முனியரத்தினம் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டார். அப்போதும் 'சிந்தாபாத் சிகாமணி'கள் 'கல்'விடு கைங்கரியத்தை நிறுத்தவில்லை. திட்டமிட்டுக் காரியம் மாற்றும் தீரர்களல்லவா அவர்கள்! பசியெடுத்தவன் உணவு கொள்ளத் துடிப்பதைப் போல் அவர்கள் நினைத்து வந்ததைச் சாதிக்கத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

கழகத் தோழர்கள் சிலர் என்னை மேடைக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டார்கள். குழப்பம் அமைதி பெறுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. மாறாகக் கூச்சல் பெருகிற்று. திடீரென்று எங்கிருந்தோ புதிய குழப்பக்காரர்கள் சிலர் கூட்டத்துள் புகுந்து மேடைக்கருகில் வந்து விட்டார்கள். அவர்கள் எறிந்த கல்தான் கண்ணதாசனின் நெற்றியில் அடித்தது. அதையொட்டி கற்கள் தொடர்ந்து மேடையை நோக்கி வீசப்பட்டன. மேடையின் அழகுக்காக பக்கத்தில் கட்டப்பட்டிருந்த தட்டிகள் பிய்த்தெறியப்பட்டன. பின்பக்கமாக வந்து தாக்குவதற்காக குழப்பக்காரர்கள் ஆற்றிய 'வீர'ப்பணி அது. அடுத்தடுத்த வீசப்பட்ட கற்கள் கண்ணதாசன் மூக்கிலும், தோழர்கள் துரைராஜ் ராபர்ட் வில்லியம் ஆகியோர் மீதும் அடித்துக் காயப்படுத்தின.

நேரம் செல்லச் செல்ல நிலைமை பயங்கரமாக உருவெடுத்துக்கொண்டிருந்தது. எங்களுடன் வந்த காட்டாம்பூர் தோழர் நல்லமுத்துவும் திருப்புத்தூர் தோழர் சங்கரனும் காரை எடுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்தார்கள். அங்கே போலீஸ்காரர்கள் இல்லை. ஸ்டேஷன் காவலுக்கு நியமிக்கப்பட்டிருந்தவர்கள்தான் இருந்திருக்கிறார்கள். மைதானத்தில் நடைபெறும் கலவரத்தைக் கேள்விப்பட்டு பெரிய போலீஸ் அதிகாரிகளெல்லாம் குறிப்பிட்ட அந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்தும் கூட அதைச் சரியாகக் கேட்டு நடவடிக்கை எடுக்க ஸ்டேஷனில் போலீசார்



இல்லை. தோழர் நல்லமுத்து விடாது வலியுறுத்திப் பேசிய பிறகுதான் அங்கிருந்த போலீசார் மைதானத்திற்கு வரத் துணிந்தார்கள் என்றால் இந்த 'நியதி'யை எங்கே போய்க்கூறி, என்ன சொல்லி அழுவது? எட்டரை மணிக்குத் தொடங்கிய கலகம் சரியாக ஒன்பதே கால் வரை நடந்துதான் அடங்கியது என்றாலும், கலகத்தை அடக்கியது கழகத் தோழர்கள் தானேயன்றி போலீசாரல்ல என்பதை தங்கவயல் பொது மக்களறிவார்கள்.

இவ்வளவு பெரிய குழப்பத்திற்குப் பிறகும் இருபதாயிரம் பேர் மைதானத்தில் அமர்ந்திருந்தார்கள். ஆசிரியர்கண்ணதாசன் கம்யூனிஸ்டுகளின் வெறிச் செயல்களைக் கண்டித்தும், அவர்களது கொள்கைக் குழப்பத்தை அம்பலப்படுத்தியும், தி. மு. கழகத்தின் பெருந்தன்மையை விளக்கியும் மேற்கொண்டு ஒரு மணி நேரம் பேசினார். கூட்டமுடிவில் கம்யூனிஸ்டுகளால் வீசியெறியப்பட்ட கல் தோழர் ஜெயராமன் என்பவரால் அறுபது ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. பொடி இல்லாமல் காலத்தைக் கழிக்க முடியாத நிலையில் தன்னைப் பழக்கிக் கொண்ட 'பொடி மணி' என்ற தோழர், ''அறிஞர் அண்ணா அவர்களை தங்க வயலுக்கு அழைத்துக் கூட்டம் போடும் வரை நான் பொடிப் போடுவதில்லை'' என்று மேடையிலேயே உறுதி கூறி பொடிடப்பியைக் கண்ணதாசனிடம் கொடுத்து விட்டார்.

கூட்டம் முடிந்ததும் நாங்கள் போலீஸ் ஸ்டேசனுக்குப் போனோம். குழப்பம் விளைவித்த

கல்லால் அடிபட்ட முனிரத்தினம் இவர். இவரது இடது கன்னத்தில் தாக்கிய கல், கன்னத்தைப் பிளந்து கடைவாய்ப் பற்களை ஆட்டம் கொள்ளச் செய்து விட்டது. புண் ஆறினாலும் தழும்பு மாறுமா என்பது சந்தேகம் தான்!

வர்களில் சிலரை அடையாளம் தெரிந்துகொண்ட நமது தோழர்கள் போலீசில் 'ரிப்போர்ட்' கொடுத்தார்கள். இன்ஸ்பெக்டர் கண்ணதாசனுக்கு ஏற்பட்ட காயத்தையும் மற்ற தோழர்களுக்கு ஏற்பட்டிருந்தகாயங்களையும் பார்த்து குறிப்பெழுதிக்கொண்டார். அப்போது வேறு பல போலீஸ் அதிகாரிகள் அந்த ஸ்டேஷனுக்கு வந்து கண்ணதாசனைக் கண்டு விபரம் விசாரித்து, சிகிச்சைக்கு சர்க்கார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்படி போலீசுக்கு ஆணை பிறப்பித்தார்கள். அங்கே பத்தரை மணிக்கு ஆரம்பமான காயப் பரிசோதனை பதினொன்னரை மணி வரை நடந்தது. சரியாக இரவு பனிரெண்டு மணியளவில் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்தோம். அதன் பிறகு நகரக் காங்கிரஸ் பிரமுகர்களான பாப்பண்ணா, எஸ். ஓ. பாக்யநாதன், டி. மாணிக்கம் ஆகியோர் நாங்கள் தங்கியிருந்த நித்தியானந்த பவனுக்கு வந்து விபரங்களை விசாரித்துச் சென்றனர். 'தங்கவயலைப் பொறுத்தமட்டில் குழப்பம் விளைவிப்பவர்கள் கம்யூனிஸ்டுகள்தான்-அதற்காக நாங்கள் வெட்கப்படுகிறோம்' என்று அவர்கள் வருத்தப்பட்டார்கள்.

அன்று கழகம் தன்னுடைய சக்தியைத் தீய வழியில் செலுத்தாமல் கண்ணியமாக நடந்ததைப் பாராட்டாதவர்கள் தங்கவயலில் இருக்கமுடியாது. தாக்கினால் தாங்குவோம், எதிர்த்தாக்குதல் நடத்தமுடியாது என்று அல்ல! அவ்வாறு செய்தால் நாடு தாங்காது என்பதற்காகவே-என்ற உண்மையை 7ந் தேதிய தங்கவயல் கூட்டம் தங்கவயல் எதிர்க்கட்சிகளுக்கு எடுத்து காட்டிவிட்டது. அந்த வகையில் கழகத்தை வளர்த்து வரும் தோழர்கள் கே. எஸ். கோபாலகிருஷ்ணன், மா. நெடுஞ்சேரலாதன், சாம்பசிவம், எஸ். எம். கெங்காதரன், இன்பதாசன், வி. முனிரத்தினம், எ. சுப்ரமணியம், துரைராஜ், ராசன், என். கோபால், தாமரைக்கண்ணன், கே. எ. ஆறுமுகம், ஆகியோர் நல்லோரின் பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

மறுநாள் காலை பத்துமணியளவில் நாங்கள் சென்னைக்குப் புறப்பட்டோம். கழகத் தோழர்கள் சூழ்ந்திருந்து வழியனுப்பி வைத்த காட்சியை இப்போது நினைத்தாலும் நெஞ்சு மகிழ்கிறது; எதிரிகளின் சில்லறைச் செயல்களால் ஏற்பட்டதொல்லைகள் எங்கோ மறைந்து விடுகின்றன.

சிறப்புக் கூட்டம்

13-4-57 சனி காலை
9 மணிக்கு
கோகலே மண்டபத்தில்
நடைபெறும்

நடிகர்
என். எஸ். நாராயணன்
அவர்கள் தலைமையில்

புரட்சி நடிகர்
எம். ஜி. இராமச்சந்திரன்
அவர்கள்
''கலைஞனின் நாட்டுப்பற்று''

கண்ணதாசன்
''கவிஞனும் காதலும்''

எஸ். எஸ். தென்னரசு,
அலமேலு அப்பாதுரை
ஆகியோர் பேசுவர்.

நன்கொடை ரூ. 1, அணா 8.

பெண்கள் படிப்பகம்,
இராயப்பேட்டை,
சென்னை-14.

வள்ளல் அழகப்பா மறைந்தார்!

வள்ளால், உனைப் பாடப் பாட வாய் மணக்குதே!

அறவலியும் பொருள்வலியும் அரண்வலியும் புயவலியும்
அடுகளத்துத்
திறவலியும் மிகவுடையான் திகைத்திருந்த கொடிவளரத்
தேர ளித்தான்
மறவர்குலச் சுடரொளியான் மனிதகுலம் உளவரைக்கும்
பெயர்வளர்த்தான்
தருவதலாற் பெருவதிலாத் தமிழாளன் பாரி புகழ்
படித்த றிந்தோம்.
கொற்றவர்போம் வாசலினுன் குன்றெடுத்த முள்ளூரான்
கோவலூரரான்
மற்றொருவர் இல்லையெனத் தன்னுவி உளவரைக்கும்
வழங்கிவந்தான்
கற்றவர்க்கும் பெரியோர்க்கும் கண்மலரப் பொருளீந்தான் .
கனிந்து கண்டான்!
நற்றிணையிற் புகழ்மணக்கும் நன்னுடன் காரியையும்
கேட்ட றிந்தோம்
களைமிகுத்த தமிழிடத்துக் களைபடிந்து போனதெனக்
கருத்திற் கொண்டு
களையெடுத்து வருமாறு அவ்வைக்குக் களைக்கொட்டுக்
கனிந்தளித்தான்
பழய நகர் நாடாண்ட பண்பாளன் பற்றறுத்த
பொருள் படைத்தோன்
மழைக்கரத்துப் பேராளன்—மற்றொருவன்—காரியையும்
மனதிற் கொண்டோம்
கொல்லியென்னும் மலைநாடன் கொல்புலியான் 'அகம்' புகழும்
வல்வில்லோரி
இல்லையென வருவர்க்கு இல்லையென(து) எடுத்தெடுத்து
ஈந்து ஈந்து
நல்லிசையும் கூத்தாட்டும் நடத்தவரும் கலைஞருக்கு
வழிதிறந்து
எல்லையுள வரைதந்து இன்றுவரை வாழ்வதையும்
இயம்பக் கேட்டோம்
மங்கையரின் மங்கலநாண் தனைத்தவிர மற்றெல்லாம்
ஈந்த வள்ளல்
கனிமொழியன், தமிழ்வேளிர் குலந்தந்த கலைவேந்தன்,
கற்பகக் கா
வனக்களிறு கண்டற்றே மனக்களிறு குதித்தெழும்பக்
கவிபுனைந்தான்
இனியமொழி புடமோசி எழுத்துவழி நின்றுலவும்
ஆயைக் கேட்டோம்
குதிரைமலை எழினியையும் நள்ளியையும் மலையனையும்
பேகன் என்பான்
கதகதக்க மயிலுக்குப் போர்வைதரு கனிவினையும்
பிற்றைநாளில்
பதிமுழுதும் பஞ்சமெனத் துடிக்குங்கால் பொருளீந்த
சீதக்காதி
நதியினையும் பிறர் சொல்லக் கவியுரைக்க நாம் கேட்டோம்,
கண்டோமில்லை!
கண்டறிய நானென்று தலைமுறைக்குக் கண்திறந்தான்
ஒருவனென்றால்,
"எண்டிசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழ் அணங்கு"
ஈன்ற வள்ளல்
பண்டொருநாள் மீன்கொடியிற் பார்புரந்த பாண்டியனின்
வழியில் வந்தோன்
கொண்டதெலாம் அறிவுனுக்குக் கொடுத்துவந்த அழகப்பன்
தவிர யாரே!
வல்முடிவே! பேய்ப்பசியே! மனம்படைத்தோர் உயிர்வாங்கும்
மரணத்தீயே!
"செல்வெளியே!" எனஉரைக்கத் திறமில்தால் உனைக்காண
வழியிலாதால்
கல்விநிலைப் பெருங்கடலைக் கணப்பொழுதில் முடித்தாயோ!
பாவி! பாவி!
பல்பொருளும் புவிக்கீந்த பாரிமகன் உயிராகின்
பசியைத் தீர்க்கும்?
முதலாளிமார்களிலே முழுமுதலைக் கல்விக்கே
முடிந்துவைத்த
முதலாளை நீ கொன்றாய்! மற்றவர்கள் வாழ்கின்றார்,
முதலடிக்க!
சதிகாரச் சாவேஉன் வயிற்றிலே சர்வகலா
சாலைகாண
இதமான ஆள் வேண்டுமென்றே எம் பெருமகனை
எடுத்துச் சென்றாய்?
கல்வியெனில் முகமலரும் கற்றவர்கள் தமைக்கண்டால்
சிரம் வணங்கும்
செல்வநிலை தேய்ந்திடினும் உள்ளநிலை தேயாமற்
சிரித்து நிற்கும்
பல்பொருளும் கல்வியுருப் பற்றிவிட மற்றோர்க்கும்
பாதை காட்டி
வல்முடிவிற் போய்ச் சேர்ந்தான் அழகப்பன்! அவன்—
—நாமம் வாழ்க மாதோ!

—கண்ணதாசன்.

புகைப்படம்: கெம்பு ஸ்டுடியோ, காரைக்குடி

> " போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 ‖ 13-4-57 ‖ இதழ் 30

மகுடி அது !

இலங்கைவாழ் தமிழர்களின் வாழ்வுரிமை பற்றிய சிக்கலை இலங்கை அரசியலார் மேலும் மேலும் பல முடிச்சுகளைப் போட்டுப் பெரிதாக்கி வருவது வருந்தத்தக்கதாகும். பல போலிக் காரணங்களைக் காட்டி பிரஜா உரிமை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதையும் அதனால் தமிழர்கள் அவதிப்பட்டதையும் நாடு அறியும்.

இலங்கையிலிருந்த முந்திய சர்க்கார் பிரஜா உரிமை பெருதவர்களை அனாதைகளாக்கி அவர்களுக்குப் பல தொல்லைகளைக் கொடுத்து இலங்கையை விட்டு வெளியேற்றுவதையே திட்டமாகக் கொண்டிருந்தது. ஆனால் இப்போதைய மந்திரிசபை, பிரஜா உரிமை இல்லாதவர்களை நாட்டை விட்டுத் துறத்தி, அதிகாரமில்லாத அகதிகளைப்போல் இலங்கையிலே வைத்துக்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் திட்டம் வெற்றி பெறுமானால் தமிழர்களுக்கு எந்த உரிமையும் கிடைக்காமல் போய்விடும் என்பதை இலங்கைவாழ் தமிழர்கள் மறந்துவிடக்கூடாது. இரண்டாந்தர மக்களாக—அந்தஸ்து அற்றவர்களாக இலங்கைவாழ் தமிழர்கள் ஒப்புக்கொண்டால், இந்த 'விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை' தமிழர்களைப் பல வழிகளில் தாக்கும்; உரிமைகளைப் பறிக்கும். செல்லாக் காசுகளாக்கிவிடும்.

வாக்குரிமைபற்றிக் கவலையில்லை; வாழ்ந்தால் போதும் என்று எண்ணினால் அந்த 'அவசர முடிவு' தமிழர்களை விடாது விரட்டிக் கொண்டு வரும் என்பதை நினைவுறுத்த விரும்புகிறோம். அரசாங்கத்தின் வசமிருக்கும் எந்தத் துறையிலும், வாக்குரிமை பெற்றவர்களுக்குத்தான் சலுகைகள் உண்டு ; அதிகாரிகளும் கடமைப்பட்டவர்களாவார்கள். நாடோடிகளுக்கு அப்படியல்ல! 'பிழைக்க வந்தவர்கள்' என்ற முத்திரை பெற்றவர்களுக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது. 'பிழைத்துப் போகட்டும்' என்ற பெரு நோக்கோடு இலங்கை சர்க்கார் தமிழர்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருப்பதாக யாரும் நினைத்துவிடக் கூடாது. நாட்டுக்குடையவர்கள், நாடோடிகளானவர்களை எப்போதும் எந்த நேரத்திலும் நாட்டை விட்டு ஓடும்படி கட்டளையிடக் கூடும் ! நடுநிசியாக இருந்தாலும், நல்ல மழை பெய்துகொண்டிருக்கும் வேளையாக இருந்தாலும் சரி அதுபற்றியெல்லாம் அவர்களுக்கு அக்கறை இல்லை. 'இது தர்மமா?' என்று கேட்க நமக்கு உரிமையில்லாமற் போய்விடும். ஒப்பந்தத்தை எடுத்துக் காட்டுவார்கள். தற்கால சாந்தி எதிர்காலத்தில் படுகுழியாக அமைந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இலங்கைவாழ் தமிழர்கள் கொஞ்சம் அமைதியாக இருந்து கூடி முடிவெடுத்து உரிமையை விளக்கினால்—இலங்கை முழுதும் எடுத்துரைத்தால், சிங்களர் மனதும் மாறக்கூடும்! அவர்களும் மனிதர்கள்தானே! நாமும் அவசரப்பட்டு 'ஆமாம் சாமி' போட்டுவிட்டால் வேறு வினை தேவையில்லை! தமிழர்கள் இல்லாமல் இலங்கை செழிப்பாக இராது என்று தெரிந்துதான் சிங்களவர்கள், தமிழர்களை ஊமைகளாய் வைத்துக்கொண்டே சிங்கள நாட்டைச் சீர்படுத்த நினைக்கின்றனர். ஒரு காலத்தில் சிங்களம் சீர்பட்ட பிறகு 'தமிழர்களே வெளியேறுங்கள்' என்று சொல்லத்தான் போகிறார்கள் சிங்களவர்கள். அதற்கான முன்னறிவிப்புத்தான் இந்த மகுடி வாசிப்பெல்லாம்! மகுடியில் மயங்கினால், மானம் பறிபோய்விடும்! மாடுகளைப்போல் உழைத்து மலையெனச் செல்வத்தைச் சிங்களத் தீவில் குவித்துவிட்டுக் கும்பியைக் காயப்போட்டுக் கொண்டு, வருகிற வழியில் தனுசுக்கோடியில் ஒரு மொட்டையையும் போட்டுக்கொண்டு வரவேண்டியதுதான். எச்சரிக்கை !

தந்தை

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

வந்த நங்கையொருத்தியின் வாழ்வை நாசமாக்கிய அவன் வாழ்வு முழுதும் அமைதியே இல்லாமல், இன்பம்அணுவளவும் இன்றிஇயந்திரம் போன்று வாழ்ந்து வந்தான்.

ஞாயிறுதோறும் அவன் கடற்கரைக்குச் சென்று வெகுநேரம் அமர்ந்து இருந்துவிட்டு வருவது வழக்கம், அன்று ஏனோ விரைவாகவே கிளம்பிவிட்டான் தன் வீடு நோக்கி.

அப்பொழுது ஒரு மாது பத்து வயதுப் பையன் ஒருவனையும், நான்கு வயதுப் பெண் ஒன்றையும் தன் கைளில் பிடித்தவாறு வருவதைக் கவனித்தான்.

அவள்-அவள்-ஆம் கௌசல்யா தான். அவளைக் கண்டதும் அவன் உடல் வேர்த்துவிட்டது. இருளாக இருந்த இடத்திற்குச் சென்று அவளையே கவனித்துக்கொண்டிருந்தான்.

விளக்கின் ஒளியில் அவளுடன் செல்லும்குழந்தைகளைக்கண்டான்.

அந்தச் சிறுவன் – சந்தேகமில்லாமல் அவன் குழந்தைதான். அவனுடைய மூக்கே அவனுக்கும் மூக்கு, வாய் எல்லாம் அவனைப் போன்றேதானிருந்தன. சிறுவயதில் எடுத்த படமொன்றிருந்தது, அவனுடையது. அதைப் போன்றேதான் அச்சிறுவனும் இருந்தான்.

அவள் பின்னாலேயே சென்றான் இருப்பிடத்தையறிய.

அன்று இரவு அவனுக்கு உறக்கமேயில்லை. அவனுக்குப் பாச உணர்ச்சி பொங்கியெழுந்தது. அவன் மகன் ! நினைத்தாலே அவனுக்குப் பெருமிதமாக இருந்தது. ஒரு குழந்தைக்குத் தந்தை அவன். நெஞ்சிலே மகிழ்ச்சி கொஞ்சுகிறது. எனினும் என்ன செய்வான். உலகத்தார் முன் இது என் மகன் என்று கூறமுடியுமா? "மகனே வாடா" என்றழைத்து, மடிமீது அமர்த்தி, முத்தம் தந்து இன்பமாக இருக்கத்தான் முடியுமா? என்ன தான் அவன் செய்யமுடியும்? பாவம் பரிதவித்தான்! பாசம் அவன் உள்ளத்தில் பொங்கி எழுந்தது.

கிழமை தவருது ஞாயிறன்று கடற்கரைக்குச் சென்று மறைவாக உட்கார்ந்து தன் மகனின் செய்கைகளைக் கண்டு இரசிப்பான். அவனுடைய உள்ளத்திலே பாசவுணர்ச்சி பொங்கியெழும். அப்படியே மகனைக் கட்டிப்பிடித்து "மரகதமே! மாணிக்கமே! முற்ருத பெருநிலவே! கிட்டாத உயிர் தருவே! நான் பெற்ற செல்வமே!" என்றெல்லாம் கூறி முத்தம் கொடுக்க ஆசை ஏற்படும்.

ஒருநாள் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவனாய் அவளிடமே சென்று "என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டான்.

அவனைக் கண்ட அவள் வெறுப்பும், பீதியும் கலந்த பார்வையை வீசிவிட்டு குழந்தைகளை எடுத்துக் கொண்டு மடமடவெனச் சென்று விட்டாள்.

வீடு சென்ற அவன் இரவெல்லாம் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். பாசத்தை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

அவன் அவளைக் கைவிட்டுச் சென்றதும் அவள் நிலைக்கு இறங்கி அவளுடைய அடுத்த வீட்டுப் பெருந்தகையாளர் மணந்துகொண்டார் என்று அறிந்தான் அவன்.

சிறிதுநேரம் சிந்தித்து ஓர் முடிவிற்கு வந்து அவருக்கு ஒரு கடிதம் எழுதினான்.

'ஐயா !

தங்களிடம் பேச விரும்புகிறேன். ஐந்து நிமிட நேரம் போதும்.'

என்று எழுதியனுப்பினான்.

ஐயா !

நாளை, 'செவ்வாய்க்கிழமை, வரவும். எதிர்பார்க்கிறேன்' என்று பதில் வந்தது.

அதன்படி அவன் சென்றான்.

அவனை அவர் வரவேற்றார். அவருடைய தோற்றத்தினின்று அவர் ஓர் நற்பண்பாளர் என்று தெரிந்தது.

"உட்காருங்கள். ஐயா!" என்றார்.

"ஐயா ! நான்..."

"எதுவும் சொல்லவேண்டாம். எனக்குத் தெரியும். என் மனைவி எல்லாம் சொல்லியிருக்கிறாள்." என்றார்.

"என் வேண்டுகோள் இதுதான். ஒரே ஒருமுறை அந்தச் சிறுவனை பார்த்து ஒரே ஒரு முத்தம் கொடுத்துவிட்டுச் செல்கிறேன்." என்றான்.

"சரி" என்று கூறி, வேலைக்கார னைக் கூப்பிட்டு சிறுவனை அழைத் துக்கொண்டு வரச்சொன்னார்.

உள்ளே ஓடிவந்த சிறுவன் தன் தந்தைக்கு முத்தமிட்டான். உண் மையான தந்தைக்கு அல்ல !

"அதோ அவருக்கு ஒரு முத்தம் கொடு." என்றார்.

சிறுவனைத் தூக்கியணைத்து மு மெல்லாம் முத்த மழை பொழி தான். அவன் செய்கையைக் கண் சிறுவன் அவன் பிடியினின்று வில முயன்றான்.

சிறுவனைக் கீழே இறக்கிவிட் விட்டு "நன்றி ஐயா! நன்றி வண கம்" என்று கூறிக்கொண்டே தன் கண்களினின்று வழியும் கண் ணீரைத் துடைத்துவிட்டு, விரை வாக வெளியேறினான் உண்மை தந்தை வரதன்.

தெ. ஆ. மாவட்ட தி. க. செயலாளர் விலகல்.

கே. எம். வேலு எம். சி., தி. மு. கழகத்தில் சேர்ந்தார்

கடலூர் தி. க. தலைவரும், தி. க வின் தென்னாற்காடு மாவட்ட செயலாளரும், கடலூர் நகராண்மைக் கழக உறுப்பினருமான தோழர் கே. எம். வேலு அவர்கள் தி. க.விலிருந்து வலகிக்கொண்டதை 31-3-57 அன்று பதிவுத் தபால் மூலம் மாவட்ட தலைவருக்கு தெரிவித்துவிட்டு 1-4-57 அன்று கடலூர் 2வது வட்டம் தி. மு. கழகத்தில் தன்னை உறுப்பினராக பதிவு செய்துகொண்டார். இதை திருத்தி வெளியூர் 4-4-57 அன்றைய 'விடுதலை' இதழில் பொய் செய்தி வெளியிட்டு இருப்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், கடலூரில் இதுவரை எத்தனை தி. க. தோழர்கள் விலகி, தி. மு. கழகத்தில் சேர்ந்துள்ளனர் என்ற பட்டியலையும் அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும் என்பதையும், நகர தி. மு. கழக செயலாளர் கி. சோவிந்தராசனும், 2வது வட்டச் செயலாளர் எஸ். அஜீசும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

தந்தை

மூலம்: மாபசான்

தமிழில்: இரா. மதனகோபால், பி.காம்.

வரதன் சர்க்கார் அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒரு சாதாரண குமாஸ்தா. தினமும் அவன் தன் காரியாலயத்திற்குப் பஸ்ஸில்தான் போவது வழக்கம் அவன் என்ன பணம் படைத்தவஞ பாண்டியாக் கிலும், ரோவரிலும், பிளிமத்திலும் பவனி வர சாதாரணமானவன் தானே !

அவன் ஏறிச்செல்லும் பஸ்ஸில் கூடவே ஒரு பெண்ணும் தினம் ஏறுவது வழக்கம். அவன் எதிரில் தான் அவள் உட்காருவாள்.

அவள் ஒரு கடையில் வேலை செய்பவள். அவளும் வேலையின் பொருட்டுத்தான் தினமும் அந்தப் பஸ்ஸில் ஏறிச்செல்வது. அவள் ஓர் இளமங்கை.அழகின் அச்சாணி மண்டபத்தில் அசைந்தாடும் மயில் அவள் இல்லையென்றாலும், பார்த்தோரை கவரும் கவர்ச்சி, எழில் பெற்றிருந்தாள். தந்தம்போன்ற நிறமும், கருமையான கண்களும் அவள் எழிலை எடுத்துக்காட்டின எட்டு மடங்கு.

முதன் முதலில் அவளை அந்தப் பஸ்ஸில் கண்டதும் அவனுக்கு அவள் முகம் திருப்தியைத் தந்தது. சில சமயங்களில் நாம் காணும் ஒரு பெண்ணைக் கட்டியணைத்து முத்தங் கொடுத்து நம்முடையவளாக்கிக் கொள்ள மனம் விழைகிறதல்லவா? அதே போன்றுதான் வரதனின் மனதிலும் எண்ணச்சுழல் எக்காள மிட்டது. அவன் மனதில் எழுந்த எண்ணங்களுக்கேற்ப நடக்கக் கூடிய நங்கைதான் அவள் என்ற தொரு திருப்தி நிலவியது அவன் முகத்தில் அவளைக் கண்டதும்.

பஸ்ஸில் அவன் அவளையே பார்த்துக்கொண்டிருப்பான். அவன் தன்னைக் கவனிக்கிருன் என்பதை உணர்ந்ததும் அவள் உணர்ச்சி ஊசலாடும், உள்ளம் உவகை பெறும், கன்னம் சிவக்கும். வெட்கம் பெருகிட வேறுபுறம் தன் முகத்தைத் திருப்பிக் கொள்வாள். அவனும் அவள்மீதிருந்து தன் பார்வையை விலக்கி வேறுபுறம் பார்க்க விரும்புவான் ! ஆனல், அவன் விருப்பத்திற்கேற்று நடக்காமல் அவள்மீதே அவன் பார்வை செல்லும். அவர்கள் வாய்திறந்து பேசிக்கொள்ளாவிட்டாலும் அவர்கள் கண்கள் பலப்பல செய்திகளை பரிமாறிக்கொண்டன.

ஒருமுறை பஸ் முழுதும் நிறைந்திருந்தபொழுது அவள் தனக்கு இடமில்லாமல் தவித்தாள். வரதன் எழுந்து தன் இடத்தைக் கொடுத்தான். அவன் செய்கைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் அவள் ஒரு புன்சிரிப்பைப் பரிசாக ஈந்தாள். அதைக் கண்ட வரதனின் உள்ளம் பேருவகை கொண்டது.

அதன்பின் அவர்களிடையே பேச்சு வளரலாயிற்று. தினமும் கால்மணி நேரம் பஸ்ஸில் பிரயாணம் செய்வார்கள். அந்தக் கால் மணி நேரம் அவனுக்கு ஒரு முக்கியமான நேரம் அவனுடைய அன்ருட வாழ்வில். அலுவலத்தில் வேலை செய்யும் போதாகிலும் சரி, வீட்டில் இருக்கும்போதாகிலும் சரி அவன் மனதில் அவளுடைய மதிமுகமே நர்த்தனமாடும். எப்போதும் அவள் நினைவு அவனுக்கு. அவளைப்பற்றி நினைக்கையிலேயே அவனுக்கு ஒரு வித இன்பம். அவள் பஸ்ஸில் வந்து ஏறுகையில் அவன் மனதில் ஒரு சுழற்சி. இறங்கிப்போகையில் ஏக்கம் சூழும். இப்படி அவன் காதல் வலையிலே சிக்கித் தவித்தான்.

பலமுறை அவன் வேண்டியும் ஒத்துக்கொள்ளாமல், கடைசியில் ஒருமுறை அவனுடன் சினிமாவிற்கு வருவதாக ஒப்புக்கொண்டாள் அவள்.

அதன்படி குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தனர். சினிமாவிற்கு செல்லுமுன் அவள் அவனைக் கேட்டாள்:

"இன்னும் நேரமிருக்கிறதல்லவா ? அதற்குள் நான் ஒன்று பேச வேண்டும்."

"என்ன ? என்ன பேசவேண்டும் ? சொல் !" என்ருன் வரதன்.

"நான் ஏமாற்றப்படக்கூடாது. அங்கு செல்லுமுன் என்னிடம் தவருன வழிகளில் நடக்கமாட்டேன் என்று உறுதிகொடுங்கள்" என்ருள்.

அதைக் கூறிவிட்டு அவள் அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினுள். அவன் என்ன பதில் சொல்வது என்று யோசித்தான். அவள் கேட்ட உறுதி அவனைத் திடுக்கிடச் செய்தது என்ருலும் சமாளித்துக் கொண்டான். நெருப்பையும் பஞ்சையும் ஒன்ருக வைத்துவிட்டு நெருப்பே சும்மாயிரு என்ருல் சும்மாயிருக்குமா ? அதுபோன்று அவள் அவனை சும்மாயிருக்க வேண்டும் என்று கோரினுல் அவன் என்ன செய்வான் ?

அவன் பதிலளிக்காதது கண்டு அவளுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது. அவன்மேல் துக்கம்பொங்க அவள், "நான் கேட்ட உறுதியளிக்க முடியவில்லையென்ருல் சொல்லுங்கள் நான் இப்படியே போய்விடுகிறேன்." என்ருள்.

"உன் விருப்பப்படியே செய்கிறேன். கோபம் வேண்டாம் கோமளமே !" என்ருன்.

அவன்மீது அவளுக்கிருந்த அவநம்பிக்கை மடிந்தது. "உண்மையாக அப்படி நடப்பீர்களா ?" என்ருள். "என்மீது நம்பிக்கையில்லையா உனக்கு? உன் விருப்பப்படியே நடப்பேன், கலங்காதே !" என்ருன் வரதன்.

"உன் பெயர் என்ன ?" என்று வினவினுன்.

"கௌசல்யா !" என்ருள்.

"நான் தசரதனல்ல! என் பெயர் வரதன். வா. சினிமாவிற்கு போகுமுன் காபி சாப்பிட்டுவிட்டு போகலாம்" என்ருன்.

இருவரும் ஓட்டல் 'கிரீன்லாண்ட்' டிற்கு சென்றனர். அங்கு தனியாக ஓர் அறைக்குச் சென்று காபி சாப்பிட்டனர்.

காபி சாப்பிட்ட பின்னர் அவன் ஏதோ நினைத்துக்கொண்டவனுய் அவள் கையை எடுத்து முத்தமிட்டான். அவள் மிக்க கோபம் கொண்டவளாய், "என்ன மிஸ்டர், வரதன். நீங்கள் கொடுத்த வாக்குறுதி..." என்ருள்.

"மன்னித்துவிடு கௌசல்யா ! ஏதோ நினைத்துக்கொண்டு அப்படி செய்துவிட்டேன்." என்ருன்.

இருவரும் ஏதும் பேசாமல் இறங்கித் தெருவில் நடந்தனர்.

டிக்கெட் வாங்கிக்கொண்டு சினிமாவிற்குச் சென்றனர். அது ஓர் காதல் சித்திரம். காதலின் முழு தத்துவத்தையும் வைத்துப் பின்னப் பட்டதோர் அரிய சித்திரம்.

அவர்கள் மிக உன்னிப்பாக திரையையே பார்த்துக்கொண்டிருந்தனர். காட்சிகள் மாறிக்கொண்டேயிருந்தன.

கதாநாயகனும், கதாநாயகியும் இன்பப் பள்ளுப்பாடி, ஆடி ஓடித் திரிகின்றனர். பின் மெல்ல கதாநாயகன், தன் காதலியின் கையைப் பிடித்து அருக இழுக்கிருன். அவளும் அவன் இழுப்புக்கு விட்டுக்கொடுக்கிருள்.

வரதன் கை மெல்ல கௌசல்யாவின் தோளைத் தொட்டுக்கொண்டிருந்தது. அவளும் அவன் கையைப் பற்றினுள்.

கதாநாயகியின் முகத்தைத் தன் அருகில் கொண்டுவந்து கதாநாயகன் முத்தமிடுகிருன்.

வரதன் முகம் கௌசல்யாவை நெருங்க, அவள் முகமும் அவன் முகத்தை நெருங்குகிறது. பின் இருவரும் கட்டியணைத்து முத்தமிடுகின்றனர். பிரிக்கமுடியாதபடி அவர்கள் உதடுகள் ஒட்டிக்கொள்கின்றன.

பின் திடுக்கிட்டவளாய் அவன் பிடியினின்று விலகி எழுந்துசென்றுவிட்டாள்.

திகைப்படைந்த வரதன் அவள் பின்னுலேயே சென்ருன்.

அவள் அவனை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல் சென்றுவிட்டாள். அவன் அவளைச் சமாதானப்படுத்த முயன்ற எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்தன. முடிவில் அவனிடம் அவள் ஏதும் பேசாமல் பஸ் ஏறிச் சென்றுவிட்டாள்.

இரண்டு நாட்கள் கழித்து அவளை பஸ்ஸில் சந்தித்தான். அவனைக் கண்டதும் அவள் "தங்களிடம் ஒரு வார்த்தை பேசவேண்டும். வரமுடியுமா ?" என்ருள்.

பஸ்ஸிலிருந்து இறங்கி அவள் பின்னுல் சென்ருன்.

"நம்முடைய காதல் முறிந்துவிட்டது. இனி, நாமிருவரும் சந்தித்து,பேசுவது என்பதுகூடாது. நாமிருவரும் மறந்துவிடவேண்டும். இனி தங்களைச் சந்திக்க நான் விரும்பவில்லை." என்ருள்:

"ஏன் ?" என்ருன்.

"தவறிழைத்தவளாகி விடுவேன் நான். சமூகத்தின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாவேன்." என்ருள்.

அவள் பேச்சைக் கேட்டு சிறிது நேரம் சிந்தித்தான் வரதன். பின் நான் உன்னை மணந்துகொள்கிறேன். இது உறுதி' என்ருன்.

"இது நடக்கக்கூடிய காரியமல்ல. நான் வருகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள் !" என்று கூறிவிட்டு சென்றுவிட்டாள் கௌசல்யா.

அவளை அவன் மறுபடியும் சந்தித்து ஒருவாரம் ஆகிவிட்டது.

ஒருநாள் அவன் தன் அறையில் அமர்ந்திருக்கும்பொழுது யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்து சென்று திறந்தான்.

அங்கே கௌசல்யா நின்றிருந்தாள் !

அவனைக் கண்டதும் அவள் அவன் கையை எடுத்து தன் மார்பின் மீதுவைத்து அழுத்திக்கொண்டாள்.

அவன் அவளை அப்படியே அணைத்தவாறு தன் அறைக்கு அழைத்துச்சென்ருன். இன்பத்தைச் சுவைத்தனர்.

ஏறக்குறைய மூன்று மாதங்களை அவர்கள் அப்படியே இன்பகரமாக ஓட்டினர்.

அவன் நினைத்தது கிடைத்தது. அவளைச் சுவைத்தான், நேரம் காலமின்றி.

பின்னர் அவள் சொன்ன ஒரு சேதி அவனை இடிபோலத் தாக்கியது. அதுதான் அவள் தாயாகப் போகிருள் என்பது. எப்படியாவது அவளிடமிருந்து பிரிந்துவிட வேண்டுமென்று விரும்பினுன். அவளிடமிருந்து விலகிச்செல்ல ஏதேதோ மார்க்கங்கள் தேடினுன். முடிவில் இரவோடு இரவாக அவன் முதலில் வசித்துவந்த இடத்தை விட்டுக் கிளம்பி வேறு ஓர் இடத்திற்கு யாராலும் கண்டுபிடிக்க முடியாத இடத்திற்குச்-சென்ருன்.

காதலித்து, சுவைத்து, கர்ப்பம் உண்டாக்கி பின் கைவிட்டுச் சென்ற காதலனைத் தேடியலையவில்லை கௌசல்யா. தன் தாயிடம் சென்று அடைக்கலம் புகுந்தாள். நடந்தவற்றையெல்லாம் கூறி அழுதாள்.

சில நாட்கள் சென்ற பிறகு ஓர் ஆண் மகவுக்குத் தாயானுள். கல்யாணமாகாமலே ஒரு குழந்தைக்குத் தாயானுள், அந்தக் கன்னி !

புரட்டுப் புராணத்திலே வரும் கௌசல்யா கிழக்கணவன் கல்லுப்போல் உணர்ச்சியற்றிருக்க, யாகத்திற்கு வந்த ரிஷித் தடியன்களுடன் கூடி, மகிழ்ந்து, விபச்சாரம் புரிந்து குழந்தை பெற்ருள். ஆனுல், இந்தக் கௌசல்யா நம்பி மோசம் போனவள்.

ஆண்டுகள் பல கடந்தன. வரதனுக்கு வயதாகிவிட்டது. அத்துணை வயதாகியும் அவன் மணம் புரிந்து கொள்ளாமலே ஒண்டிக்கட்டையாகவே இருந்தான். அவனுக்கு வாழ்வே இனிக்கவில்லை. கடனுக்காக, இயந்திரம் போன்று பணியாற்றி, உண்டு, உறங்கிவந்தான். அதே வீட்டில் வசித்து, அதே தெருவில் நடந்து, அதே அலுவகத்தில் பணிபுரிந்து வந்தான். நம்பி

— 4-ம் பக்கம் —

குளித்தலையில்

வெள்ளிவிழா :-
வரவேற்புப் பொதுக் கூட்டம்

★

14-4-57ல் நடைபெறுகிற தி மு. கழக பொதுக்குழுவை யொட்டி மாலை 6 மணிக்கு கடம்பர்துறை அழகிரி மன்றத்தில்

பொதுமக்கள் சார்பில்

வெற்றிபெற்ற எம். எல். ஏ., எம். பி. க்களுக்கு நடைபெறும் வரவேற்பு விழாவில்

கலைஞர் மு. கருணாநிதி
தலைமையில்

அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்வார்கள்.

வெள்ளி விழா
வரவேற்புக் குழுவினர்
குளித்தலை.

'மாதிரி' சர்க்காரின் மாண்பினைக் காண்போம்!

ஏப்ரல் ஐந்தாம் நாள் கேரளத்தில் புதிய அமைச்சரவை பதவி ஏற்றுவிட்டது. அதன்மூலம் கேரளத்தின் அவமானச் சின்னமாக விளங்கிய ஜனாதிபதி ஆட்சிக்கும் அதற்குப் பக்கபலமாகத் திகழ்ந்த காங்கிரஸ் ஆட்சிமுறைக்கும் மாறுதல் அமைந்துவிட்டது. இன்றுள்ள நிலையில் தோழர் இ. எம். சங்கரன் நம்பூதிரிபட்டைத் தலைவராகக் கொண்டுள்ள அந்த அமைச்சரவை இந்தியத்துணைக்கண்டத்தில் ஏற்பட்டுள்ள ஒரே ஒரு காங்கிரசல்லாதார் அமைச்சரவை என்ற முறையிலும், உலக வரலாற்றிலேயே இரத்தப் புரட்சிமூலம் அல்லாது தேர்தல்மூலம் போட்டியிட்டு ஆட்சிக்கு வந்துள்ள முதலாவது கம்யூனிஸ்ட் அமைச்சரவை என்ற முறையிலும் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது.

கடந்த பத்து ஆண்டு காலமாக காங்கிரசார் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கேரளம் பட்ட தொல்லைகள் அளவிடமுடியாதவை. முதல் **பட்டம் தாணுப்பிள்ளை அமைச்சரவை, பரூர் டி. கே. நாராயணப் பிள்ளை அமைச்சரவை** ஆகிய காங்கிரஸ் அமைச்சரவைகளின் ஆட்சியிலும், பின்னர் 1952ம் ஆண்டு 'புதிய மாடல்' ஜனநாயகத்தின் மூலம் ஆட்சிக்கு வந்த **பட்டம் தாணுப்பிள்ளையின் பி. சோ. அமைச்சரவையின்** கீழும், பிறகு வந்த டில்லிக் காங்கிரசாரின் செயல்களை எந்த ஆட்சேபனையும் செய்யாமல் 'கோயில் மாடுகளை'ப்போல தலையாட்டி வரவேற்கும் திருவனந்தபுரம் காங்கிரசாரை ஒழித்துக் கட்டினால்தான் கேரளத்தின் விழிப் புணர்ச்சி டில்லிக்குத் தெரியும். அத்தகைய காங்கிரசல்லாதாரின் ஆட்சியாலேயே கேரளம் வளம் பெற முடியும் என்று அவர்கள் கருதினர்கள். அதன் விளைவுதான் அங்கு கம்யூனிஸ்ட் அமைச்சரவை பதவி ஏற்பதற்கான சூழ்நிலை அமைந்தது.

இந்த நிகழ்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில் மெத்தவும் மகிழ்ச்சி தருவதான ஒன்ருகும். டில்லி ஆதிபத்தியத்தின்கீழ் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் எந்த திராவிடத்தின் அரசியல் நிலையில் மாற்றம் அமையவேண்டும் என்று தி. மு. கழகம் கருதுகிறதோ, அந்த திராவிடத்தின் ஒரு பகுதியான கேரளம் காங்கிரசல்லாதாரின் ஆட்சியின் கீழ் வருவது விரும்பி வரவேற்கத் தக்கது அல்லவா?

கம்யூனிஸ்ட் அமைச்சரவை பதவி ஏற்ற உடனேயே தான் செய்ய நினைத்துள்ள பல திட்டங்களை வெளியிட்டுள்ளது. தோழர் நம்பூதிரிபட் அவை பற்றிய விளக்கங்களை அளித்துள்ளார். அவர்கள் செய்யப்போவதாகச் சொல்லும் திட்டங்களெல்லாம் முற்போக்கு பெறும் வருமானத்தின் ஒரு பங்கைக் கேரளம் ஏன் பெறக் கூடாது என்ற கேள்வியையும் அவர் கேட்டுள்ளார். இதுவும் டில்லி பீடத்தாரால் ஒப்புக்கொள்ள முடியாத ஒன்ருகவே உள்ளது. இந்த முரண்பாடுகள் நாம் எப்பொழுதும் சொல்லி வருந்துவது போல மத்திய - மாநில அரசுகளின் கருத்து வேறுபாட்டையே அதிகப் படுத்தும் என்பதில் தவறு இருக்க முடியாது.

மத்திய ஆட்சியினரின் ஒப்புதல் இன்றி செயல்பட முடியாதெனில், தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் விருப்பப்படியான திட்டங்களைச் செயல்படுத்த மத்திய ஆட்சி தடுப்பதெனில் ஆயுதம் தாங்கிய புரட்சியின் மூலம் செயல்படுவோம் என்று கம்யூனிஸ்ட் கட்சியில் எப்பொழுதும் தங்களின் தீவிரக் கருத்துக்களின் மூலம் தனி இடம் வகிக்கும் தோழர்கள் சுந்தரையாவும், ரணதேவும் குறிப்பிட்டுள்ளார்கள். இவர்களின் இந்தக் கருத்துக்கள் உண்மையாக இனி செயல்படுவதற்கான திட்டமாகவும் இருக்கலாம். அல்லது இப்படிப்பயமுறுத்துவதன் மூலம் மத்திய அரசு இறங்கி வந்து கேரளத்தின் நலனில் அக்கரை செலுத்தும் என்று திட்டமிட்டுப் பேசப்படுகிற சொற்பொழி

மொழிவழிக் கிளர்ச்சிகளின் தலைவர்கள் என்றும் அவர்கள் வர்ணித்து வந்துள்ளார்கள். குறிப்பிட்ட மொழி பேசும் பகுதியினர் ஒன்ருக வாழ்வதை மற்றவர்களைப் போலவே அவர்களும் வலியுறுத்தி வந்திருக்கிருர்கள். அந்த முறையில் கடந்த 1956 பிப்ரவரியில் நடைபெற்ற சர்வகட்சித் தமிழர் கூட்டணியில் நின்று அவர்கள் தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை ஆதரித்து வலியுறுத்தி வந்துள்ளனர். அவற்றுள் கேரள-தமிழ் மாகாணங்களின் எல்லைப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவது பற்றிய **இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாகாணக் கமிட்டியின் 18-1-56-ம்** நாளைய தீர்மானம் அந்த நேரத்தில் அவர்களால் பிரமாதப்படுத்தப்பட்டது.

'தொடர்ச்சியான பிரதேசத்தையும், கிராமத்தையும் அடிப்படையாகக் கொண்டு தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அப்படிப் பரிசீலனை செய்யும் பொழுது தேவிகுளம், பீர்மேடு தாலூக்காக்களில் பெரும் பகுதி தமிழ் நாட்டுக்குச் சேர வேண்டும்.'

சிலம்பொலி கேட்குமா? சில்வண்டு கதறுமா?

பனம்பள்ளி கோவிந்த மேனவின் காங்கிரஸ் அமைச்சரவையாலும், அதைத் தொடர்ந்து அமைந்த **ஜனாதிபதியின் நேர் ஆட்சியாலும்** கேரள மக்கள் வதைபட்டார்கள். அவர்களின் ஜனநாயக இயக்கங்கள் நசுக்கப்பட்டன. திராவிடத்தின் மற்றப் பகுதிகளைப் போலவே கேரளமும் டில்லி ஆதிபத்திய வாதிகளால் மாற்ருந்தாய் மனப்பான்மையோடு நடத்தப்பட்டது. அவற்றில் கடைசியாக மக்களாட்சி முறைக்கே இழுக்குத் தேடுவதாக அமைந்த மத்திய ஆட்சித்தலைவரின் சட்டசபைக் கலைப்பு முன்னரே துடித்துக் கொண்டிருந்த கேரள மக்களை மேலும் துரிதப்படுத்தியது. தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதிகாரம் செலுத்த முடியாமல் டில்லி ஆதிபத்தியம் நினைத்தபடியெல்லாம் ஆட்டுவிக்கப்படுகிற அவலநிலை அவர்களைத் தூண்டியது.

வாதிகள் மகிழும் வகையில் அமைந்துள்ளன. நில அபிவிருத்திக்கான அவர்களது திட்டங்களும், தோட்டத்தொழிலில் அந்நியர் ஆதிக்கத்தை களைவது பற்றிய திட்டங்களும் எல்லா முற்போக்குக் கருத்தினராலும் எப்பொழுதும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. ஆனால் அவற்றைச் செயல்படுத்துவதற்கு டில்லி ஆட்சிபீடம் அனுமதிக்குமா என்பதே இப்போழுதுள்ள பிரச்னையாகும். பொதுவாக மாநில அரசின் நிர்வாகங்களில் விரும்பியபடி தலையிடுவது மத்திய அரசின் அன்ருட நடவடிக்கைகளில் ஒன்ருகிவிட்டிருக்கிறது. இந்நிலையில் மத்திய அரசினர் விரும்பாத ஒரு அமைச்சரவை கேரள மாநிலத்தில் இயங்குவதை அவர்கள் முழு மனதோடு ஆதரித்துக் கொண்டிருப்பார்கள் என்று உறுதிப்படுத்திக்கொள்வதற்கில்லை.

மாநில சர்க்காரின் முற்போக்குத் திட்டங்கள் செயல்படுவதை மத்திய ஆட்சிபீடம் இசைவு தராமல் செயல்படுத்த முடியாத நிலையே இப்பொழுது உள்ளது. உதாரணமாக கேரளத்தின் தோட்டக்காடுகளைத் தேச உடமையாக்கக்கூடாது என்ற கொள்கையை மத்திய ஆட்சியினர் கொண்டுள்ளனர். ஆனால் அதைச் செய்வதன்மூலம் கேரளத்தின் நல்வாழ்வுக்கு வழி வகுக்க முடியும் என்று நம்பூதிரிபட் குறிப்பிடுகிருர். அதுபோலவே வங்காளம் போன்ற வடநாட்டு மாநிலங்கள் சணல் உற்பத்தியில் மத்திய சர்க்கார் பெறும் வருமானத்தில் ஒரு பகுதியைப் பெறும்பொழுது கேரளத்தின் தேசியப் பொருள்களான தேங்காய், மிளகு, ரப்பர் இவற்றிலிருந்து மத்திய அரசினர்

வாகவும் இருக்கலாம். எது எப்படி இருந்தபோதிலும் திருவனந்தபுரம் சர்க்காரின் முற்போக்குத் திட்டங்களை, டில்லி அரசு ஏற்றுச் செயல்படும் என்று நாம் உறுதியாக நம்புவதற்கில்லை.

எனவேதான், டில்லி ஆதிபத்தியத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள, விடாது போராடி வரும் தமிழ் மக்கள் தங்கள் வழியில் கேரள சகோதரர்களும் வருவதற்கான காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்று எண்ணுகிருர்கள். அதோடு தமிழ் மக்கள் எதிர் பார்க்கும் இன்னும் இரண்டு முக்கிய செதிகளும் கேரள கம்யூனிஸ்ட் அமைச்சரவையிடம் உள்ளன. இரண்டும் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளாலும், மற்றைய முற்போக்குக் கருத்தினராலும், ஏன் காங்கிரசாராலேயும் பல முறை வலியுறுத்திக் கூறப்பட்ட உண்மைகளாகும்.

ஒன்று, தேவிகுளம், பீர்மேடு பிரச்னை.

மற்ருென்று கேரளத்தில் விணடிக்கப்படுகிற ஆற்றுநீரை தமிழகத்திற்குப் பயன்படுத்துவது.

கம்யூனிஸ்டுகள் மொழி வழி மாநிலக் கிளர்ச்சிகளில் எப்பொழுதும் முன்னேடிகளாக இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருந்திருக்கிருர்கள். இன்னும் தாங்களை

—என்ற அந்தத் தீர்மானங்களின் வாசகங்களைத் தமிழ் மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை.

அதுபோலவே வீணுகும் கேரளத்து ஆற்று நீரை தமிழ் நிலம் பயன்படுத்துவதையும் எல்லோரும் வரவேற்று வந்திருக்கிருர்கள். இது கேரள சர்க்காருக்கு நட்டத்தைத் தருவதல்ல என்பதைக் கேரள கம்யூனிஸ்டுகளும் உணர்வார்கள்.

எனவே, நம்பூதிரிபட்டின் கம்யூனிஸ்ட் சர்க்கார் தமிழ் மக்களின் மீது பேரன்பு கொண்டு இந்த இரண்டு காரியங்களிலும் நியாயபூர்வமானதும் நீதியின் அடிப்படை கொண்டதுமான முடிவுகளை மேற்கொள்ளும் என்று கம்யூனிஸ்டுகளின் வாக்குறுதிகளில் நம்பிக்கை கொண்டுள்ள தமிழ் மக்கள் எதிர் பார்ப்பதில் தவறில்லை.

—ப. புகழேந்

கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

ஏப்.	14	குளித்தலை.
,,	18	மருத்துவக் கல்லூரி —சென்னை.
,,	28	சேலம்.
,,	29	பாலக்கோடு.
மே	5	குடியேற்றம்.
,,	17	நீலகிரி
,,	18	,,
,,	19	,,
,,	20	கோவை.

தென்னரசு நிகழ்ச்சிகள்

ஏப்ரல்	14.	குளித்தலை
,,	21.	சென்னை
,,	28.	சித்தூர்
மே	5.	குடியேற்றம்

(3)

பரிசுப் புடவை

ப.வாணன்

என்ன துணிச்சலில் உள்ளே போனேனோ எனக்குத் தெரியாது. புடவையை விரித்துக் காட்டினேன். அவளும் என் செய்கையைப் பற்றித் தவருக எதுவும் நினைத்துக் கொள்ளவில்லை. விருப்பமாகப் பேசினாள். வேடிக்கையாகச் சிரித்தாள். அன்போடு புடவையை வாங்கிக் கொண்டாள்! பின்னர் உண்மையை விளக்க ஆரம்பித்தேன்.

"அவர் சொல்லித்தான் கொண்டுவரவில்லை!"

"பின்...?" ஒரு விநாடியில் அவள் பார்வை மாறியது.

"உனக்குப் பிடித்த இந்தப் புடவை உன்னையே அடையவேண்டும் என்று நானே தான் கொண்டுவந்தேன். உங்களால் எப்பொழுது பணம் கொடுக்கமுடியுமோ, அப்பொழுது கொடுங்கள். அதுவரை கணக்கில் வைத்துக்கொள்கிறேன்." என்றேன்.

அவள் ஒரு நிமிஷம் என்னைப் பார்த்தாள். பிறகு உரக்கச் சிரித்தாள்!

"உங்கள் கடை வியாபாரத்திற்கு, இப்படி, ஒரு விற்பனை தந்திரமா? ஐயோ, இந்த வம்பே எனக்கு வேண்டாம், அவர் வந்தால் சப்தம் போடுவார்." என்ருள்.

"தயவு செய்து அப்படி இன்னொரு தடவை கூறவேண்டாம்... வியாபாரத்திற்கு எங்களுக்கு தந்திரம் தேவையில்லை. வேண்டிய ஆர்க்கை சப்ளை செய்யவே முடியவில்லை..."

"பின் இதை ஏன் கொண்டு வந்தீர்கள்?"

"உனக்குப் பிடித்தமான பொருளானதால்...! உன் அழகிற்கு, அழகு செய்யும் என்று எனக்குத் தோன்றியதால்!"

"அப்படியா? என் அழகிற்கு, அழகு செய்து பார்க்கவா.. இல்லை. இனி பேசவேண்டாம். தயவு செய்து இதை எடுத்துப் போங்கள்."

இத்தோடு அந்த சம்பாஷணை முடிந்திருந்தால் இன்றைக்கு இவ்வளவு ஆபத்துகளும் நேர்ந்திருக்காது, சார்! அந்தப் புடவையை அவளுக்குக் கொடுத்துத்தாகை வேண்டுமென்று எனக்குப் பிடிவாத மொன்றுமில்லை. ஏதோ ஆசைப்பட்டாளே, கணக்கில் கொடுத்துவிடலாம் என்று எண்ணித்தான் எடுத்து வந்தேன். அன்று தனபால் இருந்திருந்தால்கூட இந்த நிலைமைக்கு இடமேற்பட்டிருக்காது. சில விநாடிகளுக்குப்பின் அவளே பேச ஆரம்பித்தாள்.

"சரி...கொண்டுவந்து விட்டீர்கள். அதுவரை சரியோ, தப்போ, நானே இந்தப் புடவையை வைத்துக்கொள்கிறேன்!" என்ருள்.

அத்தோடு நிற்கவில்லை. மேலும் சில நிபந்தனைகள் போட்டாள்!

"பணம் கொஞ்சம், கொஞ்சமாகத்தான் தருவேன். அதோடு, இதை நான் வாங்கி இருப்பதை என் கணவரிடம் கூறக்கூடாது! எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது சொல்லவேண்டிய முறையில் சொல்லிக்கொள்கிறேன்!" என்று கூறிவிட்டு என்னைக் குறும்புப் பார்வையிலே பார்த்தாள்.

இதற்கு நான் என்ன பதில் கூறுவது? என் நெற்றி பூராவும் வியர்த்துவிட்டது. கால்கள் நடுங்கின. அவளுக்கிருந்த துணிவு எனக்கு வரவில்லை! "நீங்கள் பணத்தைப் பற்றிச் கவலைப்பட வேண்டாம்.........கொடுக்கிறபோது கொடுங்கள்!..." என்று கூறிக்கொண்டே வெளியே வந்துவிட்டேன். அவளோ தன் சிவந்த அதரங்களை அகற்றி தந்தப் பற்களை லேசாகக் காட்டிய வண்ணம் புடவையை மார்போடு அணைத்துக் கொண்டாள்!

மறுநாள் காலை முகவாட்டத்தோடு என் அறைக்கு வந்தார் தனபால். எனக்குக் கொஞ்சம் திகில்தான்!

"என்ன, சார்! முகமெல்லாம் வாடி இருக்கிறது?" என்றேன், கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு.

"ஒன்றுமில்லை......உங்க கடை பாக்கி..."

கடை பாக்கியா..... அதைப்பற்றி என்ன?"

"அடுத்த மாதம் கொடுக்கலாமா? இந்த மாதம் தீபாவளி செலவு அதிகம்."

"அதனுலென்ன, சார். உங்களுக்கு சௌகரியப்பட்டபோது கொடுங்கள். நான்தானே காஷியர்!" என்றேன்.

அவருக்கு பரமதிருப்தி. "எங்கள் வீட்டிற்கு டிபன் சாப்பிட வாருங்கள், சார்! என்று கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டார். அன்றுமுதல் அடிக்கடி அவர் அறைக்கு நான் போவதும், என் அறைக்கு அவர்கள் வருவதும் பழக்கமாகிவிட்டது!

அவளிடம் நான் புடவை கொடுத்து ஒரு மாதமாயிருக்கும். ஒருநாள் திடீரென்று அவளே என் அறைக்கு வந்தாள். "இதோ இந்தப் புடவையை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!" என்று மேஜை மீது அந்தப் புடவையை வைத்தாள்.

"ஏன்... எதற்காக திருப்பிக் கொடுக்கவேண்டும்?"

"இப்போது பணம் தோது செய்ய முடியவில்லை!"

"உன்னை நான் பணம் கேட்டேனு?"

"கேட்காவிட்டால்...?"

"வீண் வார்த்தைகள் வேண்டாம். தயவுசெய்து இதை எடுத்துப் போ. உனக்கு சௌகரியப்பட்ட போது பணம் கொடுத்தால் போதும்!" என்றேன் கொஞ்சம் அழுத்தமாக. அவள் என்னையே சில விநாடிகள் உற்றுப்பார்த்தாள்.

"அவருக்குத் தெரிந்தால்..."

"அவருக்கு எப்படித் தெரியும்?" என்று அவள் பேச்சை முடிப்பதற்குள் மடக்கினேன். பேசாமல் தலையைக் குனிந்துகொண்டு புடவையை எடுத்துக்கொண்டு போய் விட்டாள்.

அதற்கு பிறகு அவள் முகத்தை நான் பார்க்கவே இல்லை. மறுபடியும் அவளை சந்திக்கும் முன்னமே தான் இந்தப் பரங்கர சம்பவம் நடந்தது!

அன்று காலை கடைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று "அடபாவி!" என்று சப்தம் கேட்டுத் திரும்பினேன்.

"அடபாவி! நம்பினவனை மோசம் செய்தாயே? நீ வாழ்வதை பார்க்கிறேன்!......" என்று கூறிக்கொண்டே என்மேல் ஆவேசம் கொண்டவர்போல் வந்து விழுந்தார் தனபால். திடீரென்று வந்த இந்தத்தாக்குதலை சமாளிக்கத் தெரியாமல் நான் வேகமாக வராண்டாவிற்கு வந்து நின்றுகொண்டு, "எதற்காக,இப்படி கோபிக்கிறீர்?" என்றேன் அதைவிட சப்தமாக.

அவரோ, "கேள்வி வேறே கேட்கிருயா, பாவிப்பயலே...அயோக்கியப்பயலே!" என்று திட்டிக் கொண்டே என்னருகில் மறுபடியும் ஓடிவந்தார். எங்கள் சப்தத்தைக் கேட்டு எல்லா அறையிலிருந்தும் மக்கள் வெளியே வந்துவிட்டனர். சக்குவும் தலைவிரி கோலத்துடன் அறையைவிட்டு வந்தாள். தனபால் அவர் வந்த வேகத்திலே என்னை அடித்திருந்தால் நான் இந்த கைப்பிடியைத் தாண்டி வெளியே விழுந்திருப்பேன். அவருடைய ஆத்திரத்திலிருந்து தப்ப நான் நகர்ந்து என் அறைப்பக்கம் ஓட எத்தனித்தேன். அவரோ நான் நகர்ந்த காரணத்தால், நேராக இந்த கைப்பிடியைத் தாண்டி ஆருவது மாடியிலிருந்து கீழே விழுந்தார். எட்டிப் பார்த்தேன். தலைவேறு, கால் வேருக தனபால் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். எனக்கு மயக்கம் வந்தது. அந்த நேரத்தில் "ஐயோ, பாவி! என் புருஷனைக் கொன்னுட்டானே!!" என்று சக்கு புரண்டு அழுவது கேட்டது.

பிறகு நடந்தது உங்களுக்குத் தெரிந்ததுதான். அந்த நன்றி கெட்டவள் அவள் புருஷன் இறந்ததிற்கு நான்தான் காரணம் என்கிருள். நான் என்ன சார் செய்தேன்? அப்படி தனபால் சப்தம் செய்யுமளவு நான் என்ன தவறு செய்தேன்? அவளுக்கும் தனபாலுக்கும் நடந்த வாக்குவாதம் என்னவென்று தெரியவில்லை. என் மீது அபாண்டப் பழிசுமத்தி போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்திருக்கிருள். இந்த பெண்கள் சமூகமே இப்படித்தான். "இளித்து, ஏமாளிகளைத் தயாரிக்கிறது, "பெண்ணுக வந்தொரு மாயப்பிசாசம்" என்று சித்தர்கள் கூறியது பொய்யில்லை. அவள் அழகைப் பார்த்து ஆனந்தப் பட்டிருக்களாம்; ஆனுல் அதற்காக அவளுக்குப் பரிசு கொடுக்க நினைத்தேனே தவிர அவளை அடைய நினைக்கவில்லையே? தனபாலுக்கு உதவி செய்தேனே தவிர, துரோகம் செய்யவில்லையே? அந்த அபாக்யவான் இறந்தது குறித்து நான் வருத்தப்படுகிறேன். கைப்பிடி கொஞ்சம் பலமாக இருந்திருந்தால் அவன் தப்பித்திருப்பான். அவன் உயிரோடிருந்தால் நான் எல்லாவற்றையும் விளக்கி இருப்பேன். இன்று இறந்துவிட்டான். அவன் நல்ல மனிதன்; வீரமான மனிதன்; ரோஷமான மனிதன்!! இந்த பயங்கரச் சம்பவத்திற்கு அவள்தான் காரணம். நன்ருக இருந்த மனிதன் திடீரென்று என் மேல் பாயக் காரணம். உண்மையில் நடந்தது என்னவென்று அவளைக் கேளுங்கள்; தெரியும்!

சக்குபாய்

"நான் எதை சார், கூறுவது? என் அருமைக் கணவன் இறந்து இன்னும் ஒரு வாரம்கூட ஆகவில்லை. அதற்குள் எதைக் கூறுவது? பெல்லாரியில் அவர் வேலை பார்க்கும்போது என்னைத் திருமணம் செய்துகொண்டார். அங்கு மூன்று ஆண்டுகள் வேலை பார்த்த பிறகு இங்கு வேலைக்கு வந்து சேர்ந்தார். ஆரம்பத்திலேயே இந்த மாதிரி ஆறடுக்கு மாடிக் கட்டிடத்தில் அறைகளில் குடியிருப்பது நமக்கு ஒத்துவராதென்று அவரிடம் கூறினேன். ஆனுல் அவர்தான் கேட்கவில்லை. சென்னையில் இடம் கிடைப்பது குதிரைக்கொம்பு; ஆகவே கிடைத்த இடத்திலே வசதியைத் தேடிக்கொள்ள வேண்டியதுதான் என்று கூறிவிட்டார்.

(அடுத்த இதழில் முடியும்)



"வந்தோம், வந்தோம்! பிரசங்கம் தந்தோம், தந்தோம்! ஒரு நாள் ஒரு பொழுதாயினும் இனி உறங்கோம்!"—இதுதான் இப்போது காங்கிரஸ்காரர்கள் மேடைதோறும் வாசிக்கும் 'ஆவர்த்தனம்!' மேடை அதிர்கிறதாம்! விநாயகம் போன்ற பருத்த ஆசாமிகள் மேடையில் உட்கார்ந்திருப்பதால் அல்ல; பேசுபவரின் ஆட்டத்தினுல் மேடை ஆடுகிறதாம்!

மாதச் சம்பளம் நூறு ரூபாய்! போக்குவரத்துப்படி இலவசம்! படிப்பு அவசியமில்லை! கழகத்தாரைப்போல் பேசத் தெரிந்தால் போதும்—என்று வாய் விளம்பரத்தின் மூலம் பேச்சாளர்களைத் தேடிப் பிடிக்கிறார்களாம்! 'கப்பலூர் புகையிலை', இது—காரமான புகையிலை'—என்று மோட்டார்களில் சென்று மைக் விளம்பரம் செய்துகொண்டிருந்தவர்களெல்லாம் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு மனுப் போட்டிருக்கிறார்களாம்!

"படிக்காதவர்களையெல்லாம் வைத்துக் கொண்டு மேடையை அசிங்கப்படுத்தக் கூடாதே! எவனாவது கழகத்துக்காரன் அர்த்தம் கேட்டால் பதிலாவது சொல்ல வேண்டாமா?" என்று சுப்ரமணியம் மண்டையிலடித்துக் கொள்கிறாராம்!

"அதுனாலே பாவாயில்லே! பேசிறவங்க இடையிலே பேச்சை நிறுத்தக் கூடாது. யாரு கேள்வி கேட்டாலும் காதிலே வாங்காது படமடன்னு நெட்டுருப் போட்டதை ஒப்பிச்சுட்டாப் போதும்! அதுக்கு மேலே நடக்கிறதை நம்ப போலீசு பார்த்துக்குவாங்க!" என்று காமராஜர் சமாதானம் சொல்றாராம்! தஞ்சாவூர் பொம்மை மாதிரி பக்தவத்சலம் தலையை ஆட்டிக்கொண்டே திரிகிறாராம்!

"தமிழ் நாட்டுப் போலிசா? அவுங்களை நம்பாதிங்க! தொப்பிக்குள்ளேயே கருப்புச்சட்டைப் பத்திரிகைகளை வச்சிருக்காங்களாம்!" என்கிறாராம் சுப்ரமணியம்.

"எதுக்கெடுத்தாலும் இந்த சி. எஸ். இப்படித்தான்" என்று மீஞ்சூரார் மிதமிஞ்சிப் பேசுகிறாராம்! இதனாலேகூட சுப்ரமணியத்திற்கும், பக்தவத்சலத்திற்கும் பலமுறை 'லடாய்' ஏற்பட்டதாகக் கேள்வி.

"சும்மா வா சொல்றுங்க இவரை இந்திராணின்னு! எனக்கிட்டே சலாம் போட்டுக்கிட்டு இருந்தவரு, இப்ப எகிரிக் குதிக்கிறாரே! இருக்கட்டும் ஒரு கை பார்த்துக்கிறேன். எத்தனை நாளைக்கு விருதுநகர் 'டானிக்' வேலை செய்யுதுன்னு பார்க்கலாம்" இப்படி சுப்ரமணியம் அவருடைய சகாக்களிடமெல்லாம் சக்கைப்போடு போடுகிறாராம்! ஐயோ வெட்கக்கேடு! தேர்தலிலே மெஜாரிடி பலம்பெற்ற கட்சிக்குள்ளே இத்தனை லட்சணங்கள் குடியிருக்கின்றன!

"இவர்கள்தான் சில்லறை என்றால் 'கிரைப் வாட்டர்' கிருஷ்ணமாச்சாரி யாராவது சும்மா கிடக்கக்கூடாதா? 'நுணலும் தன் வாயாற் கெடும்'-என்பார்களே அதைப்போல் இவர் வேறு 'கர்ஜி'க்கிறார்! "தலை நகரில் தி. மு. க. வுக்கு பலம் ஏற்பட்டுவிட்டது. ஆகா! இனி சும்மா இருக்கலாமா?" என்று கடற்கரையில் முறுக்கியிருக்கிறார். டி. டி. கே. எப்படி வெற்றிபெற்றார் என்பதுதான் திறந்த ரகசியமாயிற்றே! இதை வேறு அந்த ஆள் சொல்லி வைக்கணுமா? பரம்பரைக் காங்கிரஸ்காரராக இருந்தால் அவருக்கு நளினம் தெரிந்திருக்கும்! இவர் 'வார்க்கு வொலிட்டி' ஆசாமிதானே! அடேஞப்பா! கடற்கரையிலிருந்து குட்டிச்சுவர் மூாம் வரை, பிரபல பேச்சாளரிலிருந்து 'பிட் நோட்டீஸ்' பேச்சாளர் வரை கழகத்தைப் பற்றிய 'வசை புராணம்' தான்! எங்கே பார்த்தாலும் கழகம்! கழகம்! கழகம்!

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஒரு மாஜி காங்கிரஸ்காரர், "போகட்டும்! இந்த அண்ணாத்துரையாலேயாவது" 'முதியோர் கல்வி' வளரட்டும் என்று ஆசி கூறுகிறாராம்! எப்படி?

—வணங்காமுடி

தங்கவயல் தழும்பு

[மேலும் சில விபரங்கள்]

கோலார்-தங்கவயலில் 7-4-57ம் தேதி இரவு நடைபெற்ற குழப்பத்திற்குப் பிறகு மீண்டும் மறுநாள் காலைகம்யூனிஸ்டுகள் நமது கழகத் தோழர்களைத் தனித்தனியாகக் கண்டு தாக்கியதாக நமக்கு அவசரத் தபால் வந்திருக்கிறது. 9-4 57ம் தேதி காலை தங்கவயல் தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் நா. கோபால் வேலைக்குப் போகும் போது கம்யூனிஸ்டுகள் வழிமறித்து அவரை பலமாகத் தாக்கியிருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து கலவரம் செய்ததை தங்கவயல் போலீசார் அறிந்திருந்தும், உணர்த்தப்பட்டும், தாக்கப்பட்ட கழகத் தோழர்களையும் சேர்த்து வழக்குத் தொடுத்திருக்கிறார்களாம்! வாழ்க(?) அந்தத் தர்மப் பிரபுக்கள்! நடுநிலைமையிலிருந்து ஒரு சர்க்கார் அதிகாரி அன்றையக் கலவரத்தைக் கண்டிருந்தால் தங்கவயல் போலீசாரின் மௌனத்துக்கு ஏதோ உட்பொருள் இருக்கிறது என்றுதான் முடிவுகட்டுவார்கள். ரௌடித்தனத்தை அடக்குவதற்கென்றே பொதுமக்களின் வரிப்பணத்தில் உத்தியோகம் பார்ப்பவர்கள், கண்ணெதிரே கலகம் நடந்ததையும் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, அடிபட்டவர்கள் மீதும் வழக்குத் தொடுப்பதென்றால் தங்கவயலில் தர்மத்திற்கே இடமில்லை என்று பொருளா?

'பெட்டிக்கேஸ்' என்றால், அடிக்கடி பொதுமக்களுக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருப்பவர்கள்மீது போலீசார் தொடுக்கும் வழக்காகும்! தங்கவயலில் தொல்லை கொடுத்தது யார்? தி. மு. கழகக் கூட்டம் நடக்கும் இடத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு என்ன வேலை? சிந்தாபாத் கோஷம் ஏன் அங்கே ஒலிக்கவேண்டும்? தங்கவயலில் உள்ள படித்தவர்களைக் கேட்டுப் பார்க்கட்டும்! சிந்திக்கத் தெரிந்தவர்களை விசாரித்துப் பார்க்கட்டும்! பேசத் தெரிந்த குழந்தைகள்கூடச் சொல்வார்கள், கம்யூனிஸ்டுகள்தான் காலித்தனம் செய்தார்கள் என்று. கடலெனத் திரண்டிருந்த கூட்டத்தைக் கலைத்துவிட முயன்றார்களே கையாலாகாத கம்யூனிஸ்டுகள் என்று மெய்வருந்தும் பொதுமக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டிய போலீசார், கழகத் தோழர்கள்மீதும் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டபோது உள்ளபடியே நமக்குச் சந்தேகம் பிறக்கிறது. மைசூர் சர்க்காருக்குத் துரோகம் செய்கிறார்களே சில சிகப்புத் தொப்பிக்காரர்கள் என்று வருத்தப்படுகிறோம். இனிமேலாவது தங்கவயல் போலீசார் பொது மக்களுக்கும் மக்கள் கட்சிகளுக்கும் ஊறு நேரிடாத வகையில் நடுநிலைமையிலிருந்து கம்யூனிஸ்டுகளின் வெறிச் செயலைக் கண்டிப்பார்களென்று நம்புகிறோம்.

15-4-57 திங்கள் மாலை
6 மணிக்கு
திருச்சி டவுன் ஹாலில்
பாராட்டுக் கூட்டம்
தலைவர்:
R. நாகசுந்தரம், M.C.
அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்
மற்றும் தேர்தலில் வெற்றிபெற்ற தலைவர்களும் கலந்து கொள்வார்கள்.
தி. மு. க. திருச்சி.

தென்றல்
ஏஜண்டுத் தோழர்களுக்
1956-57 மார்ச் மாத
முடிய கணக்குகள் முடி
வேண்டியதிருப்பதால் இ
வரை பில் பாக்கிகளை அனு
பாத ஏஜண்டுகள் உடன
யாக பில் பாக்கியை அனுப்
வைக்க வேண்டியது. ப
பாக்கி அனுப்பாத ஏஜண்
களுக்கு முன் அறிவிப்பின்
பத்திரிகை நிறுத்தப்படும்.
—நிர்வா

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்ந